வெளியீடு எண் 522.

உ

குருபாதம்

அப்பர்சுவாமிகள் அற்புத விளக்கம்



அப்பர்

Acc No: 30280
275

தருமையாதீனம்

27 5



திருநாவுக்கரசு நாயனர்

27-5

வெளியீடு எண் 522

உ

குருபாதம்

அப்பர்சுவாமிகள் அற்புத விளக்கம்

KOVILOOR ANDAVAR
A. No. 30280
LIBRARY, KOVILOOR

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் அவர்களது

திருவுளப்பாங்கின்படி

அப்பர்சுவாமிகள் குருபூஜை விழா மலராக
வெளியிடப்பெற்றது.

[சுபகிருது - சித்திரைச்சதயம்]

தருமையாதீனம்

1962

உ


குருபாதம்

பதிப்புரை

அறப்பெருஞ் செல்வி பாகத் தண்ணலஞ் செழுத்தா லஞ்சா
மறப்பெருஞ் செய்கை மாறு வஞ்சக ரிட்ட நீல
நிறப்பெருங் கடலும் யார்க்கு நீந்துதற் கரிய ஏழு
பிறப்பெனுங் கடலும் நீத்த பிரானடி வணக்கஞ் செய்வாம்.

சைவராகப் பிறந்த ஒவ்வொருவரும் தமது சமயாசாரியர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரையும் சந்தானுசாரியர்களான மெய்கண்டார், அருணந்திசிவாசாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் ஆகிய நால்வரையும் உள்ளவாறு அறிந்து நாள்தோறும் போற்றி வழிபடக் கடமைப்பட்டவர்கள்.

அத்துடன் அவர்களது சிறந்த நாளாகிய குருபூஜை விழாவினைப் பெருவிழாவாகக் கொண்டாடித் தமது சமய ஒழுக்கத்தைப் பாதுகாத்துக்கொள்ள உரிமையுடையவர்கள். தமது ஆசாரியர்களைப் போற்றி வழிபடுவதே ஒப்பற்ற சமயப் பாதுகாப்பாகும். இதனைச் சொல்லி உணர்த்துவதைவிட நடைமுறையில் உணர்த்துவதே சாலச் சிறந்த நெறி. இதனைத் திருவுள்ளங்கொண்ட தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருநாவுக்கரசுசுவாமிகள் குருபூஜை விழாவினைச் சிறப்புற நிகழ்த்துவித்து அப்பர் சுவாமிகள் அற்புத வரலாற்று நிகழ்ச்சிகள் அடங்கிய இச்சிறு நூலை, சுபகிருது ஆண்டு சித்திரைத் திங்கள் 16 ஆம் நாள் (29—4—62) ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிட்டு வழங்கியருள்கின்றார்கள். அன்பர்கள் படித்துப் பயன் பெறுவார்களாக.



தருமையாதீனம் 25ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

அப்பர் சுவாமிகள் அற்புத விளக்கம்

சமயாசாரியர் நால்வர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர் திருத்தாள்போற்றி.

திருநாவுக்கரசர் துதி

இடையருப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும்
உழவாரத்திண்
படையருத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே
பதித்தநேஞ்சும்
நடையருப் பெருந்துறவும் வாகீசப் பெருநதகைதன்
ஞானப்பாடல்
தோடையருச் சேவ்வாயும் சிவவேடப் போலிவழகும்
துதித்துவாழ்வாம்.

அவதாரம்

சைவ சமயாசாரியர் நால்வருள் இரண்டாமவராக வைத்து எண்ணப்படுபவர் திருநாவுக்கரசர். கி. பி. 7-ம் நூற்றுண்டின் முற்பகுதியில் நடுநாட்டில் உள்ள திருவாமூரில், சைவவேளாளர் குலத்தில், குறுக்கையர் குடியில், புகழனூர்க்கும், மாதினியார்க்கும் அருந்தவச் செல்வராய்த் திலகவதியார்க்குப் பின் தோன்றிய

வர்கள். மருள்நீக்கியார் என்பது இவரது பிள்ளைத் திருநாமம். இவரது இளமைப்பிராயத்திலேயே பெற்ரோர் பிரானடி சேர்ந்தனர். பெற்ரோரது பிரிவாலும், பெற்ரோர் களால் தமக்கு மணாளனாக உறுதிசெய்யப்பட்ட கலிப் பகையார் போரில் உயிர்துறக்க நேர்ந்ததாலும் ஏற்பட்ட வருத்தத்தால் தானும் உயிர்துறக்க எண்ணினர் திலக வதியார். இஃதறிந்த மருள்நீக்கியார் தமக்கைக்கு முன் தாம் உயிர்துறக்கத் துணிந்தார். தம்பியார் உளராக வேண்டும் என வைத்த கருணையினலே உயிர்தாங்கி மனைத் தவம் புரிந்துவந்தார் திலகவதியார். இந்நிலையில் மருள் நீக்கியார் உயிர்க்கு உறுதிபயக்கத்தக்க சமயம் எதுவென ஆராய்ந்து சமணசமயம் சார்ந்தார். அச்சமயத்தில் 'தருமசேனர்' என்ற பட்டம்பெற்றுச் சிறப்பெய்தினர்.

1. சூலை தீர்த்தாட்கோள்ளல்

தம்பியருக்காக உயிர்தாங்கித் தவம்புரியும் திலகவதியார் திருவதிகைப் பெருமானிடம் 'தம்பி சைவம் சாரவேண்டும்' என்று விண்ணப்பித்து வந்தார். அதிகைப் பெருமானும் 'அன்னவனைச் சூலை கொடுத்து ஆட்கொள்வோம்' என்று அருள்செய்தார். சிலநாளில் தருமசேனரான மருள்நீக்கி யார் சூலைநோயால் துன்புற்ருர். அமண் சமய அருகரால் சூலை தீராதுபோகவே தம்தமக்கையாரிடம் சார்ந்து பணிந்தார். திலகவதியார் திருவாளன் திருநீற்றை ஐந்தெழுத்தோதிக் கொடுத்து அதிகைப் பெருமான் சந்நிதிக்கு அழைத்துச் சென்ருர். ஆண்டவனருளால் பாடும் உணர்வுபெற்ற மருள்நீக்கியார் "கூற்ருயினவாறு விலக்ககிலீர்" என்ற திருப்பதிகம் பாடிப் பரவினர். இறை யருளால் சூலை நீங்கியதோடு திருநாவுக்கரசர் என்ற பெயரும் பெற்ருர். "சூலை தீர்த்து அடியேனை ஆட் கொண்டாரே" என்பது அப்பரடிகள் அகச்சான்று.

2. நீற்றறை நின்மலன் அருளால் குளிர்ந்தது

இச்செய்தியுணர்ந்த அமணர்களும் அமணர் வயப் பட்ட மகேந்திரவர்மப் பல்லவ மன்னனும் இவருக்குப் பல வகையிலும் இன்னல் விளைவிக்கத்திட்டமிட்டு நாவுக்கரசரை அழைத்துவரச் செய்தனர். நாவரசர் "நாமார்க்கும் குடி யல்லோம்" என்ற தாண்டகம் பாடி அவரெதிர் சென்றார். அமணர்கள் இவரை நீற்றறையில் (சுண்ணாம்புக்காளவாய்) இட்டனர். அங்கு "மாசில்வீணை" என்ற திருப்பதிகம் பாடி நீற்றறையைக் குளிரச் செய்தார்.

3. நஞ்சும் அமுதாம் எங்கள் நாதன் அடியார்க்கு

நீற்றறையில் வேகாது பிழைத்த திருநாவுக்கரசர் 'தங்கள் சமண் சமயத்தில் கற்றிருந்த மந்திரவலிமையால் தான் நீற்றறையில் வேகாது பிழைத்தார்' என்ற துர்ப்போத னையை அரசனுக்குக் கூறினர். நஞ்சுகலந்த பால்சோற்றை நாவரசர்க்கு அருத்தினர். 'நஞ்சும் அமுதாம் எங்கள் நாதன் அடியார்க்கு' என்று நஞ்சுணவை ஏற்று உண்டு ஊன மொன்றும் இன்றி உயிர்வாழ்ந்தார் நாவரசர்.

"வஞ்சனைப் பாற்சோறாக்கி வழக்கிலா அமணர்தந்த
நஞ்சமு தாக்குவித்தார் நனிபள்ளி யடிகளாரே"

என்பது அப்பர் சுவாமிகள் அகச்சான்று.

4. இடர்செய ஏவிய யானை பணிதல்

நஞ்சு உண்டும் உயிர்பிழைத்த நாவுக்கரசரைக் கொலைத் தொழில் வல்ல யானையைவிட்டு இடறச்செய்தனர். மதயானை வருதலைக்கண்ட நாவரசர் "அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்சவருவதும் இல்லை" என்ற உள்ள உறுதியோடு

"சுண்ணவெண் சந்தனச்சாந்தும்" என்ற திருப்பதிகம் அருளினர். கொலைத்தொழில்வல்ல யானையும் நாவரசரை வலம் வந்து வணங்கித் தன்னையேவிய அமணர்களையே துன்புறுத்தியது.

"தலைவணங்கிய ஈசன்தமர்களைக்
கோலைசெய் யானைதான் கோன்றிடுகிற்குமே"

என்பது அப்பர்சுவாமிகள் அகச்சான்று.

5. கல்லே மிதப்பாய்க் கடலைக் கடந்தது.

சமணர்கள் தாங்கள் செய்த சூழ்ச்சிகள் பலவற்ருலும் துன்புருத திருநாவுக்கரசரைக் கடைசியாகக் கல்லில் கட்டிக் கடலில் இட்டனர். அரன் ஐந்தெழுத்தை ஓதி அக்கல்லே தோணியாகக் கடலில் மிதந்துவர, திருப்பாதிரிப்புலியூருக்கு அருகில் கரையேறினர். கரையேறிய இடம் கரையேறவிட்ட குப்பம் என்ற பெயரோடு இன்றும் திகழ்கிறது.

"கல்லிஞேடு எனைப்பூட்டி அமண் கையர்
ஒல்லை நீர்புக நூக்களன் வாக்கிஞல்
நேல்லு நீள்வயல் நீலக்குடி அரன்
நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேனன்றே."

"கல்துணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நல்துணையாவது நமச்சிவாயவே."

என்பன அப்பரடிகளின் அகச்சான்று.

6. சூலக்குறியும் இடபக் குறியும், ஆலமுண்டானது அருளால்பேற்றது

கடலினின்றும் கரையேறிய திருநாவுக்கரசர் தமக் குற்ற துன்பங்களைத் துடைக்க இறைவன் தந்தையும்,

தாயும் , தமக்கையுமாய் உதவி செய்த நன்றியையுணர்ந்து போற்றுவாராய்த் திருப்பாதிரிப்புலியூர்த் திருக்கோயிலேச் சார்ந்து, ஈன்ருளுமாய் எனக்கெந்தையுமாய் உடன்ருேன்றினராய், என்ற திருப்பதிகம் பாடிப் பரவினுர். அமணர் சூழ்ச்சியும் நாவரசர் மாட்சியும் உணர்ந்த பல்லவ மன்னன் தானும் சமணசமயத்தை விட்டு சைவம் சார்ந்தான். அமண் பாழிகளேயும் பள்ளிகளேயும் இடித்து அக்கற்களேக் கொண்டு திருவதிகையில் 'குணபரவீச்சரம்' என்ற சிவன் கோயிலே எடுப்பித்தான். பின்னர் நாவரசர் சிவ தல யாத்திரை மேற்கொண்டு திருப்பெண்ணுகடம் என வழங்கும் திருத்தூங்கானே மாடம் சென்று தொழுதார். அங்குள்ள இறைவனிடத்துத் தாம் சமண் சமயம் சார்ந்ததால் ஏற்பட்ட மாசு நீங்க சூலக்குறியும் இடபக்குறியும் பொறித்தருள வேண்டினுர். அவ்வாறே இறையருளால் சூலக்குறியும் இடபக்குறியும் பொறிக்கப்பெற்ருர்.

போன்னுர் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம் போற்றி
[செய்யும்
என்ஆவி காப்பதற்கு இச்சையுண்டேல் இருங்கூற்று அகல
மின்னுரு மூவிலேச் சூலம் என்மேற் போறிமேவு கோண்டல்
துன்னுர் கடந்தையுள் தூங்கானே மாடச்சுடர்க் கோழுந்தே"

என்பது அப்பர் அடிகளின் அகச்சான்று.

7. தில்லேக்கூத்தன் திருவடி தோழுதது

சூலக்குறியும் இடபக்குறியும் பொறிக்கப்பெற்ற திருநாவுக்கரசர் பலதலங்களேயும் வணங்கிக்கொண்டுதில்லேயை அடைந்து கூத்தப்பெருமான் குஞ்சிதபாதம் தொழுதார். "என்று வந்தாய் எனும் எம்பெருமான்றன் திருக்குறிப்பை" புலப்படுத்திப் பதிகங்கள் பல பாடினுர். அவ்வூரை

விட்டுப் புறப்படுங்கால் அத்தலத்தை உடலால் புரண்டு புரண்டு (அங்கப்பிரதக்ஷிணம்) வலம்வந்தார்.

8. அரசும் கன்றும் அரனடி தொழுதது

திருநாவுக்கரசர் தில்லையில் இருந்தபொழுது சீகாழியில் உமாதேவியாரால் ஞானப்பால் உண்டு திருஞானசம்பந்தராய்த் திகழ்ந்த ஆளுடையபிள்ளையாரின் அருள் திறம் கேட்டு அவரை வணங்க விரும்பினர். சீகாழி எல்லையை அடைந்தார். நாவரசர் வருவதறிந்த திருஞானசம்பந்தர் இவரைச் சீகாழி எல்லையில் பரிவாரங்களோடும் எதிர்வந்து வரவேற்ருர். சிவவேடப் பொலிவுழகோடு திகழ்ந்த நாவரசரை அப்பரே! என்று அழைத்தருளினர். இதுமுதல் அப்பர் என்ற பெயர் வழங்கலாயிற்று. நாவரசரும் கலைஞானக்கன்ருகிய ஞானசம்பந்தர்முன் “ அடியேன் ” என்று மறுமொழி கூறினர். ஞானக்கன்றும் சம்பந்தரும், நாவுக்கரசரும் தோணியப்பரைப் பதிகம்பாடிப் பரவினர்.

9. நல்லூர்ப்பெருமான் நற்ருள் சூட்டல்

காழிநாதன் கழலடி வணங்கிய அப்பரடிகள் பல தலங்களையும் வணங்கிக்கொண்டு திருச்சத்திமுற்றம் சென்று அங்குள்ள இறைவனிடம் தமக்குத்திருவடிதீக்ஷை அருளுமாறு வேண்டினர். பெருமானும் நல்லூருக்கு வருக என்றருளி நனைந்தனைய திருவடி சூட்டியருளினர்.

“ கோவாய் முடுகியடுதிறல் கூற்றம் குமைப்பதன்முன்
பூவாரடிச் சுவடு என்மேல் பொறித்துவை ”

“ இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடிஎன் தலைமேல் வைத்தார்
நல்லூர் எம்பெருமானுர் நல்லவாறே ”

என்பன அப்பரடிகள் அகச்சான்று.

10. அரசரும் அப்பூதியடிகளும்

திருவடிதீக்ஷை பெற்ற நாவரசர் பல தலங்களையும் வணங்கிக்கொண்டு திங்களூர் வந்தடைந்தார். அந்தணரின் மேம்பட்ட அப்பூதியடிகளார் தமது புதல்வருடன் சாலை, குளம், கிணறு, தண்ணீர்ப்பந்தல் முதலிய எல்லா அறங்களையும் திருநாவுக்கரசர் பெயராலேயே அமைத்திருந்ததைக் கண்டும் கேட்டும் காரணம் அறிவதற்காக அப்பூதியடிகளைக் காணச்சென்றார். அப்பூதியடிகளின் செந்தண்மையைக்கண்ட நாவரசர் அவரது விருப்பத்திற்கிணங்கி அமுதுகொள்ள இசைந்தார். திருவமுது படைப்பதற்கு இலை கொணரச்சென்ற மூத்த திருநாவுக்கரசு அரவம் தீண்டியதால் வாழையிலையைத் தாயிடம் சேர்ப்பித்து உயிர்நீத்தார். இறந்த பிள்ளையை மறைத்துவைத்து அப்பருக்கு அமுது செய்விக்க முயன்றனர். அமுதுகொள்ள எழுந்தருளிய அப்பரடிகள் மூத்த திருநாவுக்கரசு அரவந் தீண்டி இறந்ததை யறிந்து அவ்வுடலைத் திருக்கோயிலின் முன் கொண்டுவரச்செய்து "ஒன்று கொலாமவர்" எனுந் திருப்பதிகம்பாடி உயிர் பெற்றறெழச்செய்தார்.

11. அப்பர் சம்பந்தர்க்கு ஆதிரைச் சிறப்பைச் செப்பி மகிழ்ந்தார் திருப்புகலூரில்

விடம் தீர்த்த திருப்பதிகம் அருளிச்செய்த திருநாவுக்கரசர் திருவாரூர்த் தியாகேசப் பெருமான் கழலடிதொழுது "தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் தமக்கும் உண்டாகுமோ" என்ற கருத்தமைந்த பதிகம் முதலாகப் பல பதிகங்கள் பாடிப் பரவினர். திருவாதிரைத் திருநாளில் தியாகேசப்பெருமான் திருவுலாக்காட்சியைக் கண்டுதொழுத அப்பரடிகள் அங்கிருந்தும் திருப்புகலூர்

சென்ருர். அப்பொழுது திருஞானசம்பந்தர் சீகாழியினின்றும் புறப்பட்டுப் பல தலங்களையும் வணங்கித் திருப்புகலூர் அடைந்து முருக நாயனுர் திருமடத்தில் எழுந்தருளியிருந்தார். அவர் திருநாவுக்கரசரின் வரவையறிந்து, அடியார் புடைசூழ எதிர்கொண்டு வரவேற்ருர். ஞானசம்பந்தர் திருநாவுக்கரசர்பால் ஆரூரில் நிகழ்ந்த ஆதிரைச்சிறப்பைக் கேட்டுத் தாமும் திருவாரூர் சென்று தொழுது திரும்பினுர். திரும்புங்கால் திருநாவுக்கரசர் அடியார்கள் புடைசூழ ஞானசம்பந்தரை வரவேற்று மகிழ்ந்தார்.

12. படிக்காசு பெற்றுப் பஞ்சம் தீர்த்தது

ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும்அடியார்கள்புடைசூழ, திருக்கடவூர் முதலிய பலதலங்களையும் வணங்கிக்கொண்டு திருவீழிமிழலை சென்றனர். அப்பொழுது மழையின்மையால் பஞ்சம் உண்டாயிற்று. அப்பஞ்சத்தால் அடியவர்கள் துன்புறுவண்ணம் கோயிலின் கிழக்குப் பீடத்தில் திருஞான சம்பந்தருக்கும் மேற்குப் பீடத்தில் திருநாவுக்கரசருக்கும் மிழலைப்பெருமான் படிக்காசு நாள்தோறும் வைத்துவந்தார். அக்காசுகொண்டு அடியவர்கட்கு இருமடங்களிலும் பறை சாற்றிச் சோறிட்டனர். உழவாரத் தொண்டு செய்த பான்மையினுல் வாசியில்லாக்காசுபெற்ருர் வாகீசர். ஞானப்பால் உண்டமையால் திருக்குமாரராம் பான்மைவாய்ந்த ஞானசம்பந்தர் வாசியுள்ளகாசு பெற்ருர். (வாசி - வட்டம் கொடுத்து மாற்றும் காசு.) “இருந்துநீர் தமிழோடிசை கேட்கும் இச்சையால்காசு நித்தம்நல்கினீர்” என்ற சுந்தரர் வாக்காலும்,

“ பாடலங்காரப் பரிசில் காசருளிப் பழுத்த செந்தமிழ்மலர்சூடி
நீடலங்காரத்து எம்பெருமக்கள் நெஞ்சினுள் நிறைந்து
நின்ருனே ”

என்ற திருவிசைப்பாவாலும் இந்நிகழ்ச்சியை நன்கு தெளியலாம்.

13. திருமறைக்காட்டில் கதவு திறந்தது

பஞ்சம் நீக்கிய இருபெருமக்களும் வேதாரணியம் என வழங்கும் திருமறைக்காட்டிற்குச் சென்று திருக்கோயிலை வலம்வந்து வாயிலை அடைந்தனர். கதவு அடைக்கப் பட்டிருப்பதை வினவினர். ‘முற்காலத்தில் வேதங்கள் வழி பட்டுத் திருக்காப்பிட்டுச் சென்றன. அதுமுதல் பக்கத்திலே வாயில் அமைத்து அன்பர்கள் வழிபட்டு வருகின்றனர்’ என்பதை அங்குள்ளோரால் அறிந்து நேரே கும்பிட வேண்டும் என்ற விருப்புடையோர் ஆயினர். திருஞான சம்பந்தர் நாவுக்கரசரைப் பார்த்துத் திருக்கதவம் திறக்கு மாறு பாடியருளுக என்றார். அதற்கிணங்க அப்பர் சுவாமிகள் “பண்ணின் நேர்மொழியாள்” என்று தொடங் கும் திருப்பதிகத்தில் பத்துப் பாடல்கள் பாடியும் கதவு திறவாமையால் பதினோராவது பாடலில் “இரக்கம் ஒன்றி லீர்” என்று பாடி வணங்கிய அளவில் மறைக்கதவம் திறக்கப்பெற்றது. இருவரும் நிலமுறப் பணிந்தனர். திருநாவுக்கரசரது விருப்பத்திற்கு இணங்கத் திருஞான சம்பந்தர் அடைக்கப் பாடினார். அன்று முதல் திறக்கவும் அடைக்கவுமாக இருந்து வருகிறது கதவு.

14. திருவாய்மூரில் சிவனுருக் கண்டது

திருநாவுக்கரசர் தாம் அரிதின் முயன்று திறக்கப் பாடி யருளியதையும், ஞானசம்பந்தர் ஒருபாடலில் அடைக்கப் பாடியருளியஎளிமையினையும்எண்ணிப் பெருமான் திருவுள் ளக்கிடக்கையை உணராது அயர்ந்தேன் என்ற கவலை உடையவராய் அறிதுயில் கொண்டார். அப்பொழுது வெண்ணீறணிந்த கோலத்தோடு இறைவன் எழுந்தருளி ‘நாம் திருவாய்மூரில் இருப்போம் அங்கு எம்மைத் தொடர்ந்துவா’ என்றருளிமறைந்தனர். துயிலுணர்ந்த நாவரசர்

"எங்கே யென்னை இருந்திடம் தேடிக்கொண்டு
அங்கே வந்தடையாளம் அருளினார்
தெங்கே தோன்றும் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனார் அதென்கொலோ."

என்ற பாடலை முதலாக்கொண்ட பதிகம் பாடிக் கனவில் தோன்றிய வடிவத்தோடு இறைவன் வழிகாட்டச் சென்ற இவருக்கு ஒரு பொற்கோயிலைக் காட்டி மறைந்தருளினார் இறைவன். ஞானசம்பந்தர் நாவரசர் திருவாய்மூர் செல்கின்றார் என்பதையறிந்து அங்குச் சென்றார்.

"திறக்கப்பாடிய என்னினும் செந்தமிழ் உறைப்புப்பாடி யடைப்பித்தார் உந்நின்றார்" என்று நாவரசர் பாடிய அளவில் திருஞானசம்பந்தருக்கு இறைவன் காட்சிகொடுத்தருளினார். கண்டு தரிசித்த ஞானசம்பந்தர் நாவுக்கரசருக்கும் காட்டினார். திருநாவுக்கரசர் கண்டு மகிழ்ந்து, "பாட அடியார்பரவக்கண்டேன்" என்ற திருத்தாண்டகம் பாடிப் பரவி இருவரும் திருமறைக்காடு சேர்ந்தனர்.

15. பழையாறைவடதளிப்பரமனைக் காண்டல்

மங்கையர்க்கரசியார் குலச்சிறையார் இருவரதுவேண்டு கோட்கிணங்கித் திருஞானசம்பந்தர் பாண்டியநாட்டிற்கு எழுந்தருளினார். திருநாவுக்கரசர் திருமறைக்காட்டினின்றும் பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு பழையாறையை யடைந்து வடதளியென்னும் கோயிலைநோக்கித் தொழுதார். அக்கோயிலிலுள்ள சிவலிங்கமூர்த்தியை மறைத்துச் சமணர்கள் அருகதேவனைவைத்துத் தொழுதுவந்தனர். இஃது அறிந்த அப்பமூர்த்திகள் சிவலிங்கமூர்த்தியை வழிபட்டே உணவுகொள்வேன் என்று விரதமிருந்தார். அடியவர் கருத்தறிந்து முடிக்கும் ஆண்டவன் சோழமன்னன் கனவில் தோன்றித் தான் இருக்கும் இடத்தை அடையாளங்களுடன்

சுட்டி ஆலயம் அமைக்க ஆணையிட்டருளினர். அவ்வண்ணமே சோழமன்னன் அமணர் மறைத்துவைத்த சிவனுருவைக் கண்டு ஆலயம் அமைத்து வழிபட்டான். அப்பரடிகளும் சென்று வழிபட்டுத்,

" தலையெலாம் பறிக்குஞ் சமண் கையருள்
நிலையினால் மறைத்தால் மறைக்கொண்ணுமோ "

என்று தொடங்கும் திருப்பதிகம் பாடிச் சிலநாள் தங்கிப் பணிபுரிந்தார்.

16. திருப்பைஞ்ஞீலியருகில் பொதிசோறு பெறுதல்

திருப்பழையாறைவடதளியினின்றும் பல தலங்களையும் வணங்கிக்கொண்டு திருப்பைஞ்ஞீலிக்கு எழுந்தருளினர். அப்பொழுது பசியும் நீர்வேட்கையும் வருத்தியது. உடல் தளர்ந்தாலும் மனம் தளராவாகிசர் வரும்வழியில் பைஞ்ஞீலி இறைவர் சோலையும், குளமும் தோற்றுவித்துத் தாம் ஒரு அந்தணர் கோலத்தில் பொதிசோறு சுமந்து சென்று நாவரசருக்கு அளித்து அருந்தச் செய்தார். உணவு அருந்திக் களைப்பு நீங்கிய நாவரசரை அந்தணர் வடிவுகொண்ட இறைவன் பைஞ்ஞீலிக்குஅழைத்துச்சென்று மறைந்தருளினர். அவ்வதிசயம் கண்ட அப்பரடிகள் பதிகம் பாடித் துதித்தார்.

17. திருவையாற்றில் கயிலைக் காட்சி

பைஞ்ஞீலிப் பரமனைப் பரவிய நாவரசர் நடுநாட்டுத் தலங்களையும் தொண்டைநாட்டுத் தலங்களையும் தரிசித்துத் திருக்கயிலை யாத்திரையை மேற்கொண்டார். இமயமலைப் பகுதியில் கரடுமுரடான பாதைகளில் நடந்தும் ஊர்ந்தும் நகர்ந்தும் உடலுறுப்புக்களெல்லாம் தேய்ந்து சோர்ந்தார்.

இந்நிலையில் கயிலைப்பெருமான் முனிவர் வேடம் தாங்கி நாவரசர் முன்தோன்றி "மனிதரால் அடையத்தக்கதன்று திருக்கயிலை" என்று அறிவித்தார். அதுகேட்ட அரசர் "ஆளும்நாயகன் கயிலையில் இருக்கை கண்டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" என்று உரைத்தார். அவரது மனத்திண்மை கண்ட பெருமான் மறைந்து 'ஓங்கும் நாவினுக் கரசநீ எழுந்திரு' என்று அசரீரி அருளினர். அதுகேட்டு ஊறுநீங்கிய உடலுடன் எழுந்த நாவரசர் கயிலைக்காட்சிவேண்டிப் பணிந்தார். இறைவன் 'அருகில் உள்ள இத்தடாகத்தில் மூழ்கித் திருவையாற்றையடைந்து அங்கு நம்திருக்கயிலைக் காட்சியைக் காண்பாயாக' என்று அருளினர். அவ்வாறே அருகில் உள்ள தடாகத்தில் மூழ்கி ஐயாற்றில் உள்ள திருக்குளத்தில் எழுந்து திருக்கயிலையி லுள்ள காட்சியைக் கண்டு "மாதர்ப் பிறைக் கண்ணி யானை" என்ற திருப்பதிகம் பாடிப் பரவினர்.

18. திருப்பூந்துருத்தியில் திருமடம் அமைத்தல்

கயிலைக் காட்சி கண்ட திருநாவுக்கரசர் திருமழபாடி முதலிய தலங்களை வணங்கி, திருப்பூந்துருத்தியையடைந்து இறைவனைத் தொழுதார். அங்குப் பலநாள் தங்கிப் பணி புரிய விரும்பியதால் திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் ஒன்று அமைத்தார். உழவாரப்பணி புரிந்ததோடு திருவங்க மாலை முதலிய பல தொகைத் திருப்பதிகங்களையும் அருளிச் செய்தார். இந்நிலையில் பாண்டிநாடு சென்று சிவநெறி பரப்பிய திருஞானசம்பந்தர் சோழநாட்டிற்கு வந்து திருநாவுக்கரசர் திருப்பூந்துருத்தியில் எழுந்தருளியிருப்பதைக் கேள்வியுற்றுத் திருப்பூந்துருத்திக்கு எழுந்தருளினர். அஃதறிந்த திருநாவுக்கரசர் ஞானசம்பந்தரை நேரேகண்டு கும்பிடவேண்டுமென்ற விருப்பினராய் அடியவர் எவரும்

அறியாவண்ணம் ஞானசம்பந்தர் எழுந்தருளிய பல்லக்கைச் சுமந்துவந்தார். திருப்பூந்துருத்திக்கு அருகில்வந்த ஞானசம்பந்தர் 'அப்பர் எங்குற்ருர்' என வினவ 'உம்முடைய அடியேன் உமது திருவடிகளைத் தாங்கும் பெருவாழ்வுவந்து எய்தப்பெற்று இங்குற்றேன்' என்ருர் அப்பர். அதுகேட்டபிள்ளையாரும் சிவிகையினின்றும் இறங்கி ஒருவரை ஒருவர் வணங்கி மகிழ்ந்து சிலநாள் அத்தலத்து எழுந்தருளியிருந்தனர்.

19. அரம்பையர் வலையில் அகப்படாதிருத்தல்

திருநாவுக்கரசர் பாண்டிநாட்டுத் தலங்களைத் தரிசித்து சோழநாடு மீண்டு திருப்புகலூரையடைந்து உழவாரப் பணி செய்துகொண்டு அங்கேயே தங்கியிருந்தார். அப்பொழுது க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகம் முதலிய பல பதிகங்கள் பாடினர். புகலூரிறைவன் திருக்கோயில் முற்றத்தில் உழவாரப்பணி செய்யும்பொழுது இறையருளால் பொன்னும் நவமணிகளும் தோன்றின. அவற்றையெல்லாம் கல்லோடும் புல்லோடும் தூக்கி எறிந்தார். இவரது நடையருப்பெருந்துறவை நாட்டிற்கு எடுத்துக்காட்டத் தேவ அரம்பையர்களை இவர்முன்னர்த் தோற்றுவித்தார். அவர்களது ஆடல் பாடல்களாலும் இவரது உள்ளம் மாறுபடவில்லை. மாறுபடாமாண்பைப் "பொய்மாயப் பெருங்கடலில்" என்றுதொடங்கும் திருத்தாண்டகப் பதிகத்தால் அருளியுள்ளார்.

20. திருப்புகலூரிற் சிவன்தாள் சேர்தல்

பக்தியின் வடிவுகொண்ட திருநாவுக்கரசர் மெய்யருளையடையுங்காலம் அணித்தாகவிருப்பதையறிந்து ஆண்டவனது புகலாகிய அடைக்கலப் பொருளாகிய தன்னைப்

புகலூர்ப்பெருமான் சேவடிக்கீழ் இருத்துவார் என்ற கருத்துடன் பல திருப்பதிகங்கள் பாடி முடிவாக "எண்ணு கேன் என் சொல்லி எண்ணுகேனே" என்று தொடங்கும் திருத்தாண்டகத்தை அருளிச்செய்து அதில் "புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்று புகன்று ஒரு சித்திரைச் சதய நன்னாளில் திருவடி நீழலில் இரண்டறக் கலந்தார்.

சமயாசாரியர் குருபூசை நாட்கள்

சித்திரைச் சதயம் அப்பர் சிறந்த வைகாசி மூலம்
அத்தரைப் பணிசம்பந்தர் ஆனிமா மகத்தில் அந்த
முத்தமிழ் வாதவூரர் மூதியநல் ஆடி தன்னில்
சுத்தமாம் சோதி நாளில் சுந்தரர் கயிலை சேர்ந்தார்.

சந்தானசாரியர் குருபூசை நாட்கள்

சித்திரை யத்தம் உமாபதி ஆவணித் திங்கள்தனில்
உத்திரம் சீர்கொள் மறைஞான சம்பந்தர் ஓதுகன்னிச்
சுத்தமெய்ப் பூரம் அருணந்தி ஐப்பசிச் சோதிதன்னில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே.

உ

சிவமயம்

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய

அற்புதத் திருப்பதிகங்கள்

திருவதிகை வீரட்டானம்

பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

சூலைநோய் தீர்ந்தது

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

-

காத்தாள்பவர் காவ லிகழ்ந்தமையாற்
கரைநின்றவர் கண்டுகொ ளென்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்
வார்த்தையிது வொப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புன லாரதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலு முன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

போர்த்தாயங்கோ ரானையின் ஈருரிதோல்
புறங்கா டரங்காநட மாடவல்லாய்
ஆர்த்தானரக் கன்றனை மால்வரைக்கீழ்
அடர்த்திட் டருள்செய்த வதுகருதாய்
வேர்த்தும்புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என்வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார்புனல் சூழதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

திருச்சிற்றம்பலம்

மறுமாற்றத் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

பல்லவர்க்கு மறுமாற்றந்தந்தது

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை

தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன் நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னேமே.

திருச்சிற்றம்பலம்

தனித் திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

நீற்றறை குளிர்ந்தது

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினல்
முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே.

திருச்சிற்றம்பலம்

திருநனிபள்ளி

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

நஞ்சமுதாக்கியது

துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்தி ராதே
அஞ்செழுத் தோதில் நாளு மரனடிக் கன்ப தாகும்
வஞ்சனைப் பாற்சோ றாக்கி வழக்கிலா அமணர் தந்த
நஞ்சமு தாக்கு வித்தார் நனிபள்ளி யடிக ளாரே.

திருச்சிற்றம்பலம்

திருவதிகை வீரட்டானம்

பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

கோல்யானை பணிந்தது

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளா
வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும் [மணியும்
அண்ண லரண்முர ணேறும் அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.

நரம்பெழு கைகள் பிடித்து நங்கை நடுங்க மலையை [மலரா
உரங்களெல் லாங்கொண் டெடுத்தா னென்பது மொன்று
வரங்கள் கொடுத்தருள் செய்வான் வளர்பொழில் வீரட்டஞ் சூழ்ந்து
நிரம்பு கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.

திருச்சிற்றம்பலம்

பொது

பண் - காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

கல்மிதக்கப்பாடியது

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே.

திருச்சிற்றம்பலம்

திருத்தூங்கானைமாடம்

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

இடபக்குறி சூலக்குறி பொறிக்கப்பெற்றது

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்
போற்றிசெய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண் டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே.

கடவுந் திகிரி கடவா தொழியக் கயிலையுற்றான்
படவுந் திருவிர லொன்றுவைத் தாய்பனி மால்வரைபோல்
இடவம் பொறித்தென்னை யேன்றுகொள் ளாயிருஞ்
சோலைதிங்கள்
தடவுங் கடந்தையுள் தூங்கானை மாடத்தெந் தத்துவனே.

திருச்சிற்றம்பலம்

கோயில்

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

சிதம்பர தரிசனம்

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற்
பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே.

ஒன்றி யிருந்து நினைமின்க ளுந்தமக் கூன மில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடிந்தா னடிய வற்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந் தாயென்னு மெம்பெரு மான்றன் திருக்குறிப்பே.

திருச்சிற்றம்பலம்

திருநேரிசை - பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

பத்தனாய்ப் பாட மாட்டேன் பரமனே பரம யோகீ
எத்தினாற் பத்தி செய்கே னென்னைநீ யிகழ வேண்டாம்
முத்தனே முதல்வா தில்லை யம்பலத் தாடு கின்ற
அத்தாவுன் னாடல் காண்பா னடியனேன் வந்த வாறே.

திருச்சிற்றம்பலம்

திருக்கழுமலம்

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

சீகாழி தரிசனம்

பார்கொண்டு மூடிக் கடல்கொண்ட ஞான்றுநின் பாதமெல்லாம்
நாலஞ்சு புள்ளின மேந்தின வென்பர் நளிர்மதியங்
கால்கொண்ட வண்கைச் சடைவிரித் தாடுங் கழுமலவர்க்
காளன்றி மற்று முண்டோ வந்தணாழி யகலிடமே.

கரையார் கடல்சூ ழிலங்கையர் கோன்றன் முடிசிதறத்
தொலையா மலரடி யூன்றலு முள்ளம் விதிர்விதிர்த்துத்
தலையாய்க் கிடந்துயர் ந் தான்றன் கழுமலங் காண்பதற்கே
அலையாப் பரிசிவை நாடொறு நந்தமை யாள்வனவே.

திருச்சிற்றம்பலம்

திருச்சத்திமுற்றம்

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

திருவடிசூட்டவேண்டியது

கோவாய் முடுகி யடுதிறற் கூற்றங் குமைப்பதன்முன்
பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்துவை போகவிடில்
மூவா முழுப்பழி மூடுங்கண் டாய்முழங் குந்தழற்கைத்
தேவா திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே.

கருவுற் றிருந்துன் கழலே நினைந்தேன் கருப்புவியில்
தெருவிற் புகுந்தேன் திகைத்தடி யேன்றன் திகைப்பொழிவி
உருவிற் றிகழு முமையாள் கணவா விடிற்கெடுவேன்
திருவிற் பொலிசத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே.

பொறித்தே ரரக்கன் பொருப்பெடுப் புற்றவன் பொன்முடிதோள்
இறத்தா ளொருவிர லூன்றிட் டலற இரங்கியொள்வாள்
குறித்தே கொடுத்தாய் கொடியேன் செய்குற்றக் கொடுவினைநோய்
செறுத்தாய் திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே.

திருச்சிற்றம்பலம்

திருநல்லூர்

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

திருவடிசூட்டப்பெற்றது

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.

திருச்சிற்றம்பலம்

பொது - விடந்தீர்த்த திருப்பதிகம்

பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

விடந்தீர்த்தது

ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவ ரூர்வது தானே.

பத்துக்கொ லாமவர் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துக்கொ லாமெயி றுந்நெரிந் துக்கன
பத்துக்கொ லாமவர் காயப்பட் டான்றலை
பத்துக்கொ லாமடி யார்செய்கை தானே.

திருச்சிற்றம்பலம

திருப்பழனம்

பண் - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே.

திருச்சிற்றம்பலம்

திருவாரூர்-திருவாதிரைத் திருப்பதிகம்

பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

திருவாதிரைச்சிறப்பு

முத்துவிதான மணிப்பொற்கவரி முறையாலே
பத்தர்களோடு பாவையர்சூழப் பலிப்பின்னே
வித்தகக்கோல வெண்டலைமாலை விரதிகள்
அத்தனாரூ ராதிரை நாளா லதுவண்ணம்.

பாரூர்பௌவத் தானைபத்தர் பணிந்தேத்தச்
சீரூர்பாட லாடலறாத செம்மாப்பார்ந்
தோரூரொழியா துலகமெங்கு மெடுத்தேத்தும்
ஆரூரன்ற னாதிரை நாளா லதுவண்ணம்

திருச்சிற்றம்புலம்

திருவாய்மூர்

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

படிக்காசுபெற்றது

பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு
வாடி வாட்டந் தவிர்ப்பா ரவரைப்போல்
தேடிக் கொண்டு திருவாய்மூர்க் கேயென
ஓடிப் போந்திங் கொளித்தவா றென்கொலோ.

திருச்சிற்றம்பலம்

திருவீழிமிழலை

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

போரானை ஈருரிவைப் போர்வை யானைப்
புலியதளே யுடையாடை போற்றி னானைப்
பாரானை மதியானைப் பகலா னானைப்
பல்லுயிராய் நெடுவெளியாய்ப் பரந்து நின்ற
நீரானைக் காற்றானைத் தீயா னானை
நினையாதார் புரமெரிய நினைந்த தெய்வத்
தேரானைத் திருவீழிமிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே.

திருச்சிற்றம்பலம்

திருமறைக்காடு

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

மறைக்கதவம் திறந்தது

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே.

அரக்க னைவிர லாலடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலி ரெம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க விக்கத வந்திறப் பிம்மினே.

திருச்சிற்றம்பலம்

திருவாய்மூர்

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

இறைவன் வாய்மூருக்கு வருகவென்றழைத்தது

எங்கே யென்னை யிருந்திடந் தேடிக்கொண்
டங்கே வந்தடை யாள மருளினார்
தெங்கே தோன்றுந் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனா ரதென்கொலோ.

திறக்கப் பாடிய என்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப் பாடி யடைப்பித்தா ருந்நின்ருர்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே.

தீண்டற் கரிய திருவடி யொன்றினல்
மீண்டற் கும்மிதித் தார்அரக் கன்தனை
வேண்டிக்கொண் டேன்திரு வாய்மூர் விளக்கினைத்
தூண்டிக் கொள்வன் நா னென்றலுந் தோன்றுமே.

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

பாட வடியார் பரவக் கண்டேன்
பத்தர்கணங் கண்டேன் மொய்த்த பூதம்
ஆடல்முழவம் அதிரக் கண்டேன் அங்கை
அனல் கண்டேன் கங்கை யானைக்
கோட லரவார் சடையிற் கண்டேன்
கொக்கினிதழ் கண்டேன் கொன்றை கண்டேன்
வாடல் தலையொன்று கையிற் கண்டேன்
வாய்மூ ரடிகளை நான் கண்ட வாறே.

கலங்க இருவர்க் கழலாய் நீண்ட
காரணமுங் கண்டேன் கருவாய் நின்று
பலங்கள் தரித்துகந்த பண்புங் கண்டேன்
பாட லொலியெலாங் கூடக் கண்டேன்
இலங்கைத் தலைவன் சிரங்கள் பத்தும்
இறுத்தவனுக் கீந்த பெருமை கண்டேன்
வலங்கைத் தலத்துள் அனலுங் கண்டேன்
வாய்மூ ரடிகளை நான் கண்ட வாறே.

திருச்சிற்றம்பலம்

திருப்பழையாறை வடதளி

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

அமணர் மறைத்த இலிங்கத்தை வெளிப்படுத்தியது

தலையெ லாம்பறிக் குஞ்சமண் கையருள்
நிலையி னுன்மறைத் தான்மறைக் கொண்ணுமே
அலையி னுர்பொழி லாறை வடதளி
நிலையி னுனடி யேநினைந் துய்ம்மினே.

செருத்த னைச்செயுஞ் சேணரக் கன்னுடல்
எருத்தி றவிர லாலிறை யூன்றிய
அருத்த னைப்பழை யாறை வடதளித்
திருத்த னைத்தொழு வார்வினை தேயுமே.

திருச்சிற்றம்பலம்

திருவையாறு

பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

கயிலைக்காட்சி கண்டது

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும்பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.

வளர்மதிக் கண்ணியி னானை வார்குழ லாளொடும் பாடிக்
களவு படாததொர் காலங் காண்பான் கடைக்கணிக்
கின்றேன்
அளவு படாததொ ரன்போ டையா றடைகின்ற போது
இளமண நாகு தழுவி யேறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.

திருச்சிற்றம்பலம்

திருவாரூர்

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

அரம்பையர் வலையில் அகப்படாதிருந்தது

பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை யரித்துத் தின்பீர்க்
கில்லையே கிடந்துதான் யானேல் வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்ண லாரூர்த்
தடங்கடலைத் தொடர்ந்தோரை யடங்கச் செய்யும்
எம்மான்ற னடித்தொடர்வா னுழிதர் கின்றேன்
இடையிலேன் கெடுவீர்காள் இடறேன் மின்னே,

சுருக்கமொடு பெருக்கநிலை நித்தல் பற்றித்
துப்பறையன் றனைவிரிவ் வுலகை யோடிச்
செருக்கிமிகை செலுத்தியும் செய்கை வைகல்
செய்கின்றீர்க் கமையாதே யானேன் மிக்க

தருக்கிமிக வரையெடுத்த அரக்கன் ஆகந்
தளரவடி யெடுத்தவன்றன் பாடல் கேட்டு
இரக்கமெழுந் தருளியவெம் பெருமான் பாதத்
திடையிலேன் கெடுவீர்காள் இடறேன் மின்னே.

திருச்சிற்றம்பலம்

திருப்புகலூர்

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

ஐக்கியப்பதிகம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனே
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

ஒருவனையும் அல்லா துணரா துள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவறுத்தாய்க் கில்லேன் ஏலக்
கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன்
கடுந்தேர்மீ தோடாமைக் காலாற் செற்ற
பொருவரையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

திருச்சிற்றம்பலம

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
30280

ஞானசம்பந்தம் அச்சகம், தருமபுரம்.